1984 மார்ச் 26]

வரவில்லை என்று போன் மூலம் சொன்னால் கூட எம்.டி.யிடம் அதைக் கவனியுங்கள் என்று சொல்கிறோம். அந்த டிப்பார்ட் மென்ட் ரொம்ப எஃபிஷியன்ட்டாக பங்க்ஷன் செய்துகொண்டு வருகிறது என்று எல்லோரும் பாராட்டினார்கள். சென்ற வறட்சி ஏற்பட்ட காலத்தில்கூட எல்லா மக்களும் பாராட்டக் கூடிய வகையில் வறட்சி நிவாரணப் பணிகள் நடந்தன என்பதை நீங்கள், உறுப்பினர்கள் எல்லாம்கூட பாராட்டியிருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் கிளைகளை விரிவுபடுத்தும் திட்டம்.

458—(வினா எண். 18700) திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் கிளைகளை மற்ற மாவட்டங்களிலும் விரிவாக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் கிளைகள் சென்னையில் மட்டும்தான் இருக்கின்றன. இது தமிழ்நாடு அரசாங்கத்தைச் சேர்ந்த வங்கியாக இருப்பதால் இந்த வங்கியில் முதலீடு செய்பவர்களுக்கு அதிக வட்டி கிடைக்கிறது. ஆகவே இதேபோல் மற்ற மாவட்ட தலைநகரங்களிலும் இந்த வங்கியை அமைப்பதற்கு இனிமேலாவது அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இங்கே தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி செய்கிற பணியைத்தான் மாவட்ட அளவில் மாவட்ட கூட்டுறவு வங்கிகள் செய்துகொண்டிருக்கின்றன. சென்னையில் மட்டும்தான் அதற்கு கிளைகள் உண்டு. இதை மாவட்ட அளவில் திறந்தால் மாவட்ட கூட்டுறவு வங்கிகள் பாதிப்பிற்கு உள்ளாகும்.

சேலம் மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டும்திட்டம்.

459—(*வினா எண் 21494) திரு. இ. கணேசன்: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு ஆறாவது திட்டத்தில் வீடுகள் கட்ட தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?